DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.185/2025

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | சிவசுப்ரமணி (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை **Date : 05.02.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் எருமப்பட்டியில் குடியிருந்து லோடுமேனாக வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். (சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.)

தேதி நினைவில் இல்லை சென்ற வருடம் மூன்றவது மாதம் வியாழன் கிழமை நான் சந்தையில் லோடு இரக்கிவிட்டு எருமப்பட்டியில் இருக்கும் விநாயகர் கோவிலில் மாலை சுமார் 03.30 மணியளவில் அமர்ந்திருந்தேன். அப்போது அங்கு புதியதாக அமைக்கப்பட்டிருந்த குழாயில் தண்ணீர் பிடிப்பது தொடர்பாக ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 சித்ராவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. இருவரும் ஒருவருக்கு ஒருவர் குடத்தால் அடித்துகொண்டார்கள். ஆஜர் எதிரி கல்லால் சித்ராவின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். நான் உடனே சித்ராவின் கணவருக்கு சம்பவம் பற்றி தகவல் சொன்னேன். அவர் அங்கு வந்து சித்ராவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் அமர்ந்திருந்த விநாயகர் கோவிலுக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருந்திருக்கும் என்றால் சுமார் 25 அடி இருந்திருக்கும். சம்பவத்தன்று எருமப்பட்டியில் சந்தை நடந்தது என்றால் சரிதான். அதனால் சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் மக்கள் அதிகமாக சென்று வந்தார்கள் என்றால் சரியல்ல. தண்ணீர் பைப்பானது கலைச்செல்வன் என்பவரது வீட்டிற்கு முன்பு அமைக்கப்பட்டிருந்து என்றால் சரியல்ல. பொதுவான இடத்தில் தான் அமைக்கப்பட்டிருந்தது. அது கலைசெல்வன் வீட்டிற்கு முன்பு இல்லை. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் விநாயகர் கோவில் எதுவும் இல்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் அல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**